இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு அவர்களை நோக்கி, “அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சியடைவதற்குமுன் இத்துன்பங்களைப் படவேண்டுமல்லவா!” என்றார். மேலும் மோசேமுதல் இறைவாக்கினர்வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார். அவர்கள் தாங்கள் போகவேண்டிய ஊரை நெருங்கி வந்தார்கள். அவரோ அதற்கு அப்பால் போகிறவர்போலக் காட்டிக்கொண்டார். (லூக்கா 24: 25-28)

# நாம் புதுவாழ்வுக்கு உயிர்த்தெழுவோம்!

## திருந்தந்தை மறையுரையின் சுருக்கம்

**வத்திக்கான்:** அன்புள்ள சகோதரர் சகோதரிகளே, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், வெறுமையான கல்லறையைக் கண்ட பெண்களின் மகத்தான வியப்பையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்க நம்மை அழைக்கிறது என்றும், நம்பிக்கையிலும் எதிர்நோக்கிலும் வளரவும், இறைவனுடனான நமது முதல் சந்திப்பின் அருளை மீண்டும் பெறவும் நாம் அழைக்கப் படுகிறோம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஏப்ரல் 8, இச்சனிக்கிழமை மாலை, புனித பேதுரு பெருங்கோவிலில் தலைமையேற்று வழிநடத்திய உயிர்ப்புப் பெருவிழாத் திருவிழிப்புத் திருப்பலியில் ஆற்றிய மறையுரையில் இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உயிர்த்த ஆண்டவர் நமது நம்பிக்கையை புதுப்பிக்கவும், புதிய வாழ்வுக்கு உயிர்த்தெழவும் நம்மை அழைக்கிறார் என்றும் கூறினார்.

### துயரத்திலிருந்து மகிழ்விற்கு

நிகழ்காலத்தை ஏமாற்றம், கசப்பு அல்லது திகைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே நாம் பார்க்கும் போது, எதையும் மாற்ற முடியாது என்று நம்பி, சில வேளைகளில் நாமும் கூட சோகத்தில் மூழ்கிவிட வாய்ப்புண்டு என்று வாழ்வின் எதார்த்தத்தை எடுத்துக்காட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ். மேலும், இறைவனுடனான நமது முதல் நம்பிக்கை சந்திப்பை கடந்த காலத்திற்குச் சொந்தமானதாகவும், இருள், போர், அலட்சியம் மற்றும் நிச்சயமற்ற எதிர்காலம் போன்றவற்றால் குறிக்கப்பட்ட இன்றைய கடினமான உலகிற்கு அது பொருத்தமற்றது எனவும் சில வேளைகளில் நம் மனதில் பதியலாம். இத்தகைய எண்ணத்திலிருந்து நாம் மீள வேண்டும் என்கிறார் திருத்தந்தை.



பாஸ்கா திரியை ஏற்றும் திருத்தந்தை பிரான்சிஸ்

### நம்பிக்கையுடன் முன்னேறுவோம்

ஆண்டவரின் உயிர்த்தெழுதல், நம்மை நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் முன்னோக்கிச் செல்லத் தூண்டுகிறது என்றும், வாழ்வின் திசையை மாற்றிய அவரின் உயிர்த்தெழுதல், நமது நம்பிக்கையை அடிக்கடி சிறைபிடிக்கும் கல்லறைகளின் கல்லை அகற்றுவதற்கும், எதிர்காலத்திற்கான முழு நம்பிக்கையுடன் முனைந்து முன்னேறுவதற்கும் உதவுகிறது என்றும் கோடிட்டுக்காட்டினார்.

கலிலேயாவுக்குத் திரும்புவது என்பது, நமது கடந்த காலத்தின் அருளுக்குத் திரும்புவதற்கு அழைப்பு விடுக்கிறது என்றும், நம்மையே நாம் உற்றுநோக்கிப் பார்த்து புதியதொரு வழியைப் பெறும்போது, அது இறைவனின் அன்பைப் பற்றிய நமது அனுபவத்தின் நினைவைப் புதுப்பிக்கவும் உதவுகிறது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை. இதைத்தான் நாம் செய்ய வேண்டும் எனவும், இதனையே நினைவில் வைத்து நாம் முன்னேற வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுளுடனான நமது முதல் அன்பையும், வியப்பான சந்திப்பையும், மகிழ்ச்சியையும் நாம் மீட்டெடுத்தால், நமது வாழ்வில் தொடர்ந்து முன்னேற்றம் காண முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

### நமது சொந்த கலிலேய அனுபவம்

சகோதரர், சகோதரிகளே, நமது நம்பிக்கை மற்றும் நம்பிக்கையின் அடித்தளமான இறைவனுடனான நமது முதல் சந்திப்பை நாம் நினைவுகூரும்போது, உயிர்த்த இறைவனைக் கொண்டாட, அந்த அனுபவத்தையும், உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் மீட்டெடுக்க கலிலேயாவுக்குத் திரும்புவதற்கான இறைவனின் அழைப்புக்கு நாம் பதிலளிக்கிறோம் என்றும், இது உயிர்த்த இறைவனில் நாம் முன்னேறுவதைப் புதுப்பித்து வலுப்படுத்த வேண்டும் என்றும், இறுதியாக அனைவரும் புதுவாழ்வுக்கு உயிர்த்தெழ வேண்டும் என்பதன் அவசியத்தையும் தம் உரையில் திருத்தந்தை வலியுறுத்தினார்.

## கோலாலம்பூர் புனித அந்தோணியார் பங்கு மறைக்கல்வி மாணவர்களின் தவகால

கோலாலம்பூர்: கடந்த ஏப்ரல் முதல் நாள், மாலை 4.00. மணிக்கு கோலாலம்பூர் மாமறைமாவட்டதின் மேய்ப்பப்பணி மையத்தின் (APC) டோமனிக் மண்டபத்தில் ஏறக்குறைய எண்பது மறைக்கல்வி மாணவர்கள் ஒன்று கூடிய சிறப்பு நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. இப்பங்கின் மறைக்கல்வி மாணவர்களின் படைப்பாக, இறைவேண்டல்கள், பாடல்கள் போன்ற இறைப் புகழ்ச்சியோடு நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

தொடர்ந்து, ஆசிரியர்கள் கற்றுக்கொடுத்த சிலுவைப்பாதை மன்றாட்டுகளிலும் தியானங்களிலும், நிழல்பட நாடக காட்சிகளிலும் நம்பிக்கையுடன் பங்கு பெற்றனர். இந்த சிறப்பு நிகழ்ச்சியில் மறைக்கல்வி ஆசிரியர்களும் பெற்றோர்களும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று, பங்குத்தந்தை டாக்டர் கிளாரன்ஸ் தேவதாஸ் அவர்கள் வருகைத் தந்து அனைவருக்கும் வாழ்த்தும் ஆசியும் வழங்கினார். வளர்ந்து வரும் இளைய திருஅவை சமூகத்தினருக்கு இந்தத் தியான நிகழ்வு கிறிஸ்துவ வாழ்வுக்கு இன்றியமையாததொன்றாக அமைந்தது.

இந்நிகழ்வுக்கு ஏற்பாடு செய்த மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும் ஆதரவு வழங்கிய பெற்றோர்களுக்கும் ஆசி வழங்கிய பங்குத் தந்தைக்கும் மாணவர்கள் நன்றி நவில்ந் தனர்.



அரங்கேற்றப்பட்ட நிழல்படக் காட்சி



நிகழ்ச்சியில் பங்குபெற்ற பெரும்பகுதியினர்

# குளுவாங், பிரிகாசியார் பங்கில் சிறுவர்கள் பாதம் கழுவப்பட்டது

**குளுவாங்:** புனித வியாழன் திருப்பலி கொண்டாட்டத்தின்போது, வழக்கமாக அருள்பணியாளர்கள் பங்கு மக்களில் தேர்வுச் செய்யப்பட்ட பன்னிருவரின் பாதங்களைக் கழுவுவது திருஅவை மரபு.

அவர் "ஆண்டவரும், போதகருமான நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர், ஒருவருடைய பாதங்களைக் கழுவ வேண்டும். நான் உங்களுக்கு மாதிரிகை காட்டினேன். நான் செய்தது போல் நீங்களும் செய்யுங்கள்" என்று அன்று இயேசு காட்டியதைப் பின்பற்றி இச்சடங்கு ஒவ்வொரு புனித வியாழன் அன்று நடைபெறும்.



*சிறுவர்கள் பாதங்களைக் கழுவும் பங்குத்தந்தை*

இம்முறை குளுவாங், புனித பிரகாசியார் பங்கில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் முதியோருக்குப் பதிலாக, சிறுவர்களின் பாதங்களைப் பங்குத்தந்தை Msgr. பீட்டர் இங் அவர்கள் கழவினார். அவர் தமது மறையுரையில் "சிறுவர்களாக இருக்கும் நீங்களும் பெரியவர்களுக்கு கீழ்படிதல், தாழ்ச்சி, பணிவு, இன்முகத்துடன் ஒருவருக் கொருவர் முகம் சுலியாது உதவி செய்தல், போன்றவற்றுக்கு எடுத்துக்காட்டாக சிறுவர்களாகிய நீங்கள் திகழ வேண்டும் என்று அறிவுரையும் கூறினார்.

*-ஆ.வி. டேவிட், குளுவாங்*

# திருப்பலியில் வாசகங்களைப் பாடலாகப் பாடலாமா?

எங்கள் பங்கில் ஒரு வாசகர், வாசகத்தை பாடலாகப் பாடினார். அருள்பணியாளர் உட்பட அனைவருக்கும் பெரும் அதிர்ச் சிக்குள்ளானார்கள். இவ்வாறு வாசகத்தை பாடலாகப் பாடலாமா?

கத்தோலிக்கத் திருஅவையில் திருவழி பாட்டு குறிப்பாக திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் உள்ளன. உரோமையில் இருக்கும் திருவழிபாட்டுத் திருப் பேராயம் திருவழிபாட்டில் கடைபிடிக்க வேண்டிய கோட்பாடுகளை வகுத் துள்ளது. இதை ஆங்கிலத்தில் "General Instruction of the Roman Missal (GIRM)" என்றும் தமிழில் உரோமை திருவழிபாட்டுக்கான பொது அறிவுரை கையேடு எனலாம்.

இந்த விளக்கக் கையேட்டை வைத்துத் தான் கத்தோலிக்கத் திருஅவை உலகம் முழுவதும் வாசகங்களை அந்தந்த நாடுகளின் பண்பாட்டு பின்னணியில் வார்த்தை விருந்தாகப் படைக்கிறது. இந்த GIRM பகுதி 1, அதிகாரம் 2-ல் . எண் 14 -ல் (பங்கில் உள்ள முதலாம் வாசக நூல் (நீல வர்ணம்) பக்கம் 14* காண்க) 'வாசகர் எடுப்பான குரலில், தெளிவாக பொருள் புரிந்து வாசிக்கும் முறை, வாசகங்கள் வழியாக மக்களுக்கு இறைவாக்கு சரியாக அளிக்கப்பட வாய்ப்பு அளிக்கும். அங்கீகாரம் பெற்ற ஏடுகளிலிலருந்து (நமது வாசக நூல்கள் 1, 2, 3 & 4) வாசகங்களை எடுத்து, மொழிகளின் பண்பாட்டிற்கு ஏற்பப் பாடலாம். ஆனால், இசை சொற்களை அமுக்கிவிடக்கூடாது. மாறாக, அவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும்' என்று அறிவுறுத்துகிறது.

ஆகவே, வாசகங்களை இசையாகப் பாட அனுமதி உண்டு. ஆனால், எல்லாராலும் இசையாகப் பாட இயலாது. வாசகம் கேளிக்கூத்தாகிவிடக்கூடாது. வாசகர் எவராகினும் குறிப்பிட்ட இசைக் குறிப்பைப் பின்பற்றி பாடும் திறன் பெற்றவராக இருந்தால் பாடலாம். இத்திறன் ஒரு கொடை. எனவே, இக்கொடை இல்லாதவர்கள் இறைவார்த் தையைப் பாடலாகப் படைக்க முயலக் கூடாது.

மேற்கண்ட வாசகர் அன்று வாசகத்தைப் பாடலாக பாடியது பெரும் குற்றமில்லை. அவர் ஓரளவு சரியாகப் பாடியிருந்தால் வரவேற்கலாம். ஆனாலும், இதற்கு நிபந்தனையுண்டு. இவ்வாறு பாடுவதற்கு முன் பங்குத் தந்தையின் அனுமதி அல்லது ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு, பங்கு திருவழிபாட்டு பணிகுழுவுக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும். இதனால், திருப்பலி கொண் டாட்டத்தில் கவனச்சிதறல் (distraction) ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

## பாஸ்கா பெருவிழாவில் உறுதிப்பூசுதல் பெற்றவரின் அனுபவ சாட்சியம்

என்னுடைய பெயர் போல் அந்தோணி. எனக்கு 21 வயது ஆகிறது கோலாலம்பூர் புனித பாத்திமா தேவாலயத் தில் உள்ள "RCIA"வகுப்பில் மறைக்கல்வி பயின்றேன். அது ஒரு 'தேடும்' பயணமாக இருந்தது.

கடந்த 8 ஏப்ரல் அன்று கொண்டாடப்பட்ட பாஸ்கா திருவிழிப்பு திருச்சடங்கில் உறுதி பூசுதல் பெற்றேன். ஈஸ்டர் பெருவிழாவுக்கு திர ளாக வந்திருந்த மக்களின் முன்னால் நிற்பதற்கு கொஞ்சம் பயமாக இருந்தது. அருள்பணியாளர் எனது பெயரையும் கூப்பிட்டு "தூய ஆவியாரின் முத்திரையை பெற்றுக்கொள் பரம தந்தை யின் உன்னத கொடை அவரே" என்று கூறி என் நெற்றியில் சிலுவைஅடையா ளத்தை முத்திரையிட்டார்.



ஆலயத்தில் அனைவரும் கைகளை உயர்த்தி எங் களை ஆசீர்வதித்தனர். முடிவில் அருள்பணியாளர், "உறுதி பூசுதல் எடுத்த நீங்கள் இதற்கு மேல்தான் கடவுளுடைய சிலுவையை சுமந்து செல்ல வேண்டும் ஒரு அழகான வாழ்க்கையை சாட்சி பகரும் மக்களாய் வாழ்ந்து காட்ட வேண்டும் என்று கூறினார்". அவர் கூறிய வார்த்தைகள் எனது மனதில் ஆழமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது. நானும் வாழ்நாள் இறுதி வரை கடவுளின் ஒளியை சுமந்து கொண்டு செல்ல வேண்டும் என்று உறதியாக உள்ளேன். ஏற்குறைய ஓர் ஆண்டு காலமாக எனக்கு அயராது மறைக்கல்வி போதித்த அனைத்து ஆசிரியர்களுக் கும், பங்குத் தந்தைக்கும் எனது நன்றியைத் தெரிவிக் கிறேன்.

## புனித பவுல் அடிகள் போன்று நானும்காலம் தப்பிப் பிறந்த குழந்தை



பிரிசிலா

நான் ஒரு கிறிஸ்தவளாகப் பிறந்திருந் தாலும் எந்த ஒரு அருட்ச சாதனங்களும் இதுவரை பெற்றதில்லை அதே நேரத்தில் என் தந்தை இறந்த பிறகும் என் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கையில் மிகவும் கடினப்பட்டு கொண்டிருந்தேன். இந்த RCIA வகுப்பில் சேர்ந்து, மறைக்கல்வி பெற்று அருட்சாதனம் பெற்று தற்பொழுது அவரது அன்பு பிள்ளையாக இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்வை தருகின்றது. இந்த புது வாழ்வு எனக்கு ஒரு நல்ல மாற்றத்தையும் மன அமைதியையும் கொடுக்கின்றது இது நாள் வரை எனக்குள் இருந்த துக்கம் அனைத்தும் குறைந்து என் வாழ்வு மிகவும் சிறப்பாக இருக்கிறதாக உணர்கின்றேன் நான் தொடர்ந்து இயேசு வுக்கு உண்மையாகவும் நம்பிக்கையு டனும் தொடர்ந்து வாழுவேன்.

# உயிருள்ள இயேசுவை நற்கருணையில் சந்திக்கிறோம்!

இன்று பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு. இன்றைய நற்செய்தியில் வரும் இரு சீடர்களின் சூழ்நிலையில் நாமும் சில வேளையில் சிக்கித் தவிப்பதுண்டு. உடன் பிறந்தோர், உற்றார்-உறவினர், நண்பர்கள் அனைவரும் நம்மை கைவிட்டிருப்பதோடு, நமக்கெதிராகவும் இருந்திருக்கக்கூடிய சூழ்நிலை நிலவி இருந்திருக்கும். எம்மாவு ஊருக்குச் செல்லும் சீடர்கள் மத்தியில் ஏற்பட்ட பயம், ஏக்கம், விரக்தி, அவநம்பிக்கை முதலிய எல்லாப் பாதக எண்ணங்களும் அவர்களின் சிந்தனையைச் சிறைப்பிடித்துவிட்டன. இயேசுவுக்கு ஏற்பட்ட கதி தங்களுக்கும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் அவர்களை ஆட்டிப் படைத்தது. 'இயேசு கிறிஸ்து கல்லறையில் இல்லை, உயிர்த்து விட்டார்' என அவர்களோடு இருந்த பெண்கள் கூறியதையும் சிந்தையில் நிறுத்தி பார்க்கும் நிலையில் அவர்கள் இல்லை. இம்மாதிரி யான பரிதவிக்கும் நிலை நமக்கும் ஏற்பட்டிருக்கலாம். அந்தச் சீடர்களைப் போல் நாமும் நிலைதடுமாறும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கலாம். நம்மோடு கூடவே உயிர்த்த ஆண்டவர் இருப்பதை மறந்திருக்கலாம்.

இஸ்ராயேலை மீட்கப் போகிறார் என்று அவர்கள் எதிர்பார்த்த இயேசுவை, சிலுவையில் அறைந்த ஆட்சியாளர்கள் தங்களையும் கைது செய்து விடுவார்களோ என்ற அச்சமும் நடுக்கமும் அவர்களைக் கவ்விக் கொண்டது. "இயேசு உயிரோடிருக்கிறார்" (லூக்.24:23) என பெண்கள் கூறியதையும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, நம்ப முடியவில்லை. அவ்வாறே, குலைநடுக்கச் செய்யும் பிரச்னைகளும் தொல்லைகளும் நம்மைச் சூழும் போது, நம்மோடு இருக்கும் ஆண்டவரை மறந்திருப்போம். நிழல் போல் நம்மோடு வரும் ஆண்டவரைக் கண்டு கொள்ளமாட்டோம். இந்த அச்சத்தையும் அவநம்பிக்கையையும் போக்கும் சிரஞ்சீவி மருந்தை இன்றைய நற்செய்தியில் தருகிறார் ஆண்டவர்.

"அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்த போது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன" (லூக்.24:30-31). சீடர்களின் பிரச்னைகள் அனைத்திற்கும் தீர்வு காணப்பட்டது. ஆம், கிழமைத்தோறும் நாம் பங்கெடுக்கும் திருப்பலியே, சிரஞ்சீவி மருந்து.

நமது வாழ்க்கையில் ஏற்படும் எல்லாச் சிக்கல்களுக்கும் தீர்வு காண்பதற்கு நமதாண்டவர் இயேசு கிறிஸ்து ஏற்படுத்திய அரும் மருந்தே, திருப்பலி. கிறிஸ்துவின் தியாகப் பலியால் நாம் மீட்கப்பட்டோம் என இரண்டாம் வாசகத்தில் புனித பேதுரு (1பேது1:17-21) அறிவுறுத்துகிறார். நமக்கு நிறைவாழ்வு அளிக்கும் அவரையே புனித பேதுருவும் திருத்தூதர்களும் உலகெங்கும் பறைசாற்றினர் என்று முதல் வாசகம் (திப.2:14,22-33) கூறுகிறது. ஏனெனில், "அவரோ நம் குற்றங்களுக்காகக் காய மடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின் றோம்." (எசா.53:5). எனவே திருப்பலியின் உன்னதத்தையும் பொருளையும் மாட்சி யையும் அறிந்த மக்களாக கிழமைத் தோறும், அதில் பங்கு கொண்டு பயனடைவோம். அல்லேலுயா!

அந்தோணி இன்னாசி
ஸ்ரீ கெம்பாஙான், சிலாங்கூர்

**பாஸ்கா காலம் 3-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | திப 2: 14, 22-33 |
| தி. பாடல் | 16: 1-2,5. 7-8. 9-10. 11 2-ம் |
| வாசகம்: | 1 பேதுரு 1: 17-21 |
| நற்செய்தி: | லூக்கா 24: 13-35 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- பாஸ்கா 3ம் ஞாயிறு**